# Kanganam – Puthinam Unarthum Mudhir Ilaingnanin Manaporattam

**Dr. S. Saraswathy**
**Assistant Professor**
**Department of Tamil**
**Faculty of Science and Humanities, SRM IST, Kattankulathur,Kancheepuram district- 603 203.**

**Abstract**

பெருமாள் முருகன் எழுதியுள்ள புதினங்களில் ஒன்றான கங்கணம் என்னும் புதினத்தில் கதாநாயகன் மாரிமுத்துவின்(முதிர் இளைஞன்) மனப்போராட்டங்கள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. 35 வயதை கடந்தும் திருமணமாகாத மாரிமுத்துவின் மன உணர்வுகளையும், உடலில் ஏற்படும் சிக்கல்களையும் அழகாக கூறிச் செல்வதுடன் பெண் பார்க்கும் போது ஏற்படும் பிரச்சனைகளையும், பெண் கிடைக்காமல் போவதற்கான காரணங்களையும், குடும்ப உறவுகளையும், சாதித் தொடர்புகளையும், மண் சார்ந்த நிகழ்வுகளையும் குறித்து பேசுகிறது இந்நாவல். இவற்றுள் இக்கட்டுரை முதிர் இளைஞனின் மனப்போராட்டம் பற்றி விளக்க முற்படுகிறது.

**Key words** – கங்கணம், முதிர் இளைஞன்

**முன்னுரை**

பெருமாள் முருகன் எழுதியுள்ள புதினங்களில் ஒன்றான கங்கணம் என்னும் புதினத்தில் கதாநாயகன் மாரிமுத்துவின்(முதிர் இளைஞன்) மனப்போராட்டங்கள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. 35 வயதை கடந்தும் திருமணமாகாத மாரிமுத்துவின் மன உணர்வுகளையும், உடலில் ஏற்படும் சிக்கல்களையும் அழகாக கூறிச் செல்வதுடன் பெண் பார்க்கும் போது ஏற்படும் பிரச்சனைகளையும், பெண் கிடைக்காமல் போவதற்கான காரணங்களையும், குடும்ப உறவுகளையும், சாதித் தொடர்புகளையும், மண் சார்ந்த நிகழ்வுகளையும் குறித்து பேசுகிறது இந்நாவல். இவற்றுள் இக்கட்டுரை முதிர் இளைஞனின் மனப்போராட்டம் பற்றி விளக்க முற்படுகிறது.

**கங்கணம்**

கங்கணம் என்ற தலைப்பில் இந்நாவலின் மையமான விஷயத்தை ஒட்டி இருபொருள் தொனிக்குமாறு அமைந்துள்ளது. திருமணம், குலதெய்வ வழிபாடு போன்ற மங்கள காரியங்களில் நாள் நிச்சயிக்கப்பட்டவுடன் சம்மந்தப்பட்டவர்களின் கைகளில் கட்டப்படும் கயிறு கங்கணம் எனப்படும். தவிர ஒரு செயலை தடையின்றி செய்து முடிப்பதாக உறுதி பூண்டு அதைப்பற்றிய சிந்தனையாகவே இருப்பவர்களை கங்கணம்

கட்டிக் கொண்டு அலைகிறார்கள் என்ற வழக்குத்தொடராலும் குறிப்பதுண்டு என்று பின்னுரையில் க. மோகனரங்கன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

**முதிர் இளைஞன் – யார்?**

அழகு, நிறம், படிப்பு, சாதி, வேலை, பொருளாதார வசதி ஆகிய காரணங்களினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளின் காரணமாக திருமணம் நடைபெறாமலிருக்கும் பெண்களின் நிலையை இன்றளவும் காண முடிகிறது. அதே போல் திருமண வயதைத் தாண்டியபிறகும் காரண- காரியமின்றிச் சொற்ப காரணங்களுக்காக தள்ளிப்போகும் இளைஞன் ஒருவனின் உடல் ரீதியான தவிப்புகளும், பிறரின் குத்தல் பேச்சால் ஏற்படும் தாழ்வுணர்ச்சியும், எரிச்சலும், அத்தகைய தருணங்களை எதிர்கொள்ள நேரிடும் போது அவன் கொள்ளும் பதற்றமும் அதிக மன உளைச்சலையும் அடையும் முதிர் இளைஞனாக மாரிமுத்து என்னும் கதாபாத்திரம் அமைந்துள்ளது.

**மாரிமுத்து**

விவசாயத்தை மட்டுமே தொழிலாகக் கொண்டு பள்ளி கல்வியோடு நின்று விட்ட பல இளைஞர்களுக்கு பெண் கிடைக்காமல் அவதியுறும் ஒரு நிலை இன்று பெரும்பாலான இடங்களில் நிலவுகிறது. அதற்குப் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவதே காரணமாகக் கருதப்படுகிறது. இக்கதையின் கதாநாயகனான மாரிமுத்து வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவன். குறை சொல்ல முடியாத அளவுக்கு அந்தஸ்து பெற்றவனாகவும், முகலட்சணம் பொருந்தியவனாகவும், மரியாதை மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்தவனாகவும் இருந்தபோதிலும் தேவையற்ற காரணங்களால் அவனுக்கு அமையவிருக்கும் திருமணம் ஒவ்வொரு முறையும் தள்ளிப் போவதால் மிகுந்த மன வேதனை அடைகிறான். அவன் திருமணத்தின் மூலம் பெரியதாக எதையும் எதிர்பார்க்காமல் பார்க்க ஒரு சுமாராக உள்ள ஒரு பெண் அமைந்தால் போதும் என்று தான் நினைக்கிறான்.ஆனால் ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒரு சில காரணங்களால் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது.

**பெண் பார்க்கும் படலம்**

தொட்டிப்பாளையத்திற்கு பெண் பார்க்க போனபோது வண்டி மீதானபப்பற்று விட்டுப்போயிற்று. அதற்குக்காரணம் அப்பெண் சொன்னாலாம், ”எருமைக்கடா மாதிரி ஒரு வண்டில வரான் அவனைப்பார்த்தாலே பயமா இருக்குது” என்று சொன்னதால் தன்னைப்பற்றி என்ன சொன்னாலும் அவன் கவலைப்பட்டிருக்க மாட்டான். தன் வண்டியை எருமைக்கடா என்று சொல்லிவிட்டாளே என்று நினைத்து நினைத்து அந்த வண்டியைப் பார்க்கும் போதெல்லாம் ஆவேசமாய் எருமைக்கடா ஒன்று ஓடிவரும் காட்சியே அவன் மனதில் வந்து நின்றது. அதனால் அந்த வண்டியையே விற்று விட்டான்.வண்டியைக் காரணம் சொல்லி ஆளைப்பிடிக்க வில்லை என்று மறுக்கிற காலமாக இருந்தது. அதற்குக் காரணம் அப்பெண்களுக்கு தினந்தோறும் ஐந்து , பத்து மாப்பிள்ளைகள் வந்து குவிந்து கொண்டிருந்ததே. ஆனால் ஆண்களின் நிலை அப்படி இல்லையே என்று நினைத்தான் மாரிமுத்து.

அடுத்து ராசாமணி என்ற பெண்ணைப் பார்த்தான் பிடித்துப் போய்விட்டது.ஆனால் அவள் கருப்பு நிறமாக இருந்ததால் அவளுடைய தந்தை ஐம்பது பவுனும் ஐம்பதாயிரம் ரூபாயும் தருவதாக கூறினார்.ஆனால் மாரிமுத்துவின் அம்மா கருப்பு நிறத்தைக் காரணம் காட்டி மகனுக்கு பெரிய வண்டி ஒன்று வாங்கித்தர வேண்டும் என்று கட்டாயமாகக் கூறிவிட்டாள். அதற்கு ராசாமணியின் தந்தை திருமணம் முடிந்து ஓராண்டு முடிவதற்குள் வாங்கித் தருவதாகக் கூறியும் அம்மா ஏற்றுக்கொள்ளாததால் ராசாமணியும் மாரிமுத்துவின் வாழ்க்கையில் இல்லை என்றாகிவிட்டது. அத்துயரைத் தாங்கமுடியாமல் மாரிமுத்து இரவு நேரங்களில் யாருக்கும் தெரியாமல் அழுதான். யாரும் அற்ற காட்டு வெளியில் வாய்விட்டு கதறினான்.லேசாக வளர்ந்த தாடியை அப்படியே விட்டு விட்டான்.ராசாமணியை மறக்க முடியாமல் ஒரு சொம்பு கள்ளை அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தான்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது தன்னோடு படித்த வசந்தியை திருமணம் செய்ய நினைக்கும் போது வசந்தியின் ஜாதகம் தடையாக வந்து நின்றது.அவள் மூல நட்சத்திரம் என்பதால் மாமனாரோ மாமியாரோ இல்லாத குடும்பத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஜாதகம் சொல்லியதால் அதுவும் தடைபட்டுப் போனது.தரகர் மூலமாக வேறு இரண்டு பெண்களின் ஜாதமும் வந்தது. ஒன்று கரும்பும் மஞ்சளும் விளைவித்து கிலோ கணக்கில்பவுன் போட பணம் வைத்திருப்பார்கள் விவசாயம், தொழில் என்றிக்கும்

மாப்பிள்ளைகளை விரும்பமாட்டார்கள் என்று நினைத்து மறுத்து விட்டான். மற்றொரு பெண் படித்து முடித்து டைப்ரைட்டிங் கற்றிருப்பவள் அஞ்சல் வழியில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருப்பவள் தற்காலிகமாக தனியார் கம்பூயுட்டர் சென்டர் ஒன்றில் வேலைப்பார்ப்பவள். இந்தக் காட்டு வேலைச் செய்கிற தன்னை திருமணம் செய்துகொள்ள சம்மதிப்பாளா?என்ற கேள்வியோடு தன்னைப் படிக்கவிடாமல் விவசாயத்தொழிலில் இழுத்து விட்ட அப்பனை நினைத்து நொந்து கொண்டான்.

ஒரு நாள் வண்டியில் சென்றுகொண்டிருந்த மாரிமுத்துவிற்கு முன்பொருநாள் பார்த்த பெண்ணின் நினைவு வந்தது.அப்பெண்ணின் பெயர் அமுதா.பத்தாம் வகுப்பு வரை படித்தவள்.விவசாய குடும்பம், ஜாதகம் பார்த்த போது எட்டு பொருத்தம் கூடி வந்தது.கிட்டத்தட்ட எல்லாம் முடிந்து பெண் தன் வீட்டிற்கு வந்து விட்ட மகிழ்ச்சியிலிருந்தான் மாரிமுத்து. அவ்வூருக்குச் சென்று தன் நண்பன் செந்திலின் மூலமாக விசாரிக்கும் போதுதான் தெரிந்தது அப்பெண் அமுதா செந்திலைப் பார்த்து வாங்க மாமா என்று கூறிக்கொண்டே தன் பையனுக்கு சோறு ஊண்டிக்கொண்டிருந்தாள். கழுத்தில் தாலி, கையில் குழந்தை, கல்யாணம் ஆகிவிட்ட பெண்ணின் ஜாதகம் கொடுத்து தரகர் ஏமாற்றியதை எண்ணி வேதனை அடைந்தான்.

தம்பி செல்வராசு (சித்தப்பாவின் மகன்) சொன்ன பெண்ணைப் பார்க்கலாம் என்று நினைத்துக் கேட்டான். அதற்கு அப்பெண்ணின் தந்தை ஒரு கண்டிஷன் போட்டார்.அது என்னவென்றால் தன் பெண்ணின் மீது நிலம் எழுதி வைத்தால் தான் திருமணம் என்று உறுதியாக கூறிவிட்டார். அதற்கு மாரிமுத்துவின் தாய்,

> “பொட்டச்சி பேர்ல நெலத்த எழுதி வைக்கோனுமாமா. நம்ம ஊட்டுக்கு வர்றவளுக்கு நாம எதுக்கு எழுதி வெக்கோனும். அப்பிடி நம்பிக்கையில்லாதவளக்கட்டி என்னத்துக்கு அவமானப்படோனும்” (ப.131)

என்று கூற அந்த வரனும் தட்டிப்போயிற்று. நிலம் கொடுத்தாலாவது திருமணத்தை நடத்திவிடலாம் என்று நினைத்த மாரிமுத்துவுக்கு அவ்ன் அம்மாவே குறுக்கே வந்து நின்றாள்.

பூடுதி என்னும் பெண்ணின் மூலம் ஒரு வரன் வந்தது.ஆனால் அப்பெண் விதவை.திருமணமான மூன்றே மாதத்தில் அவளுடைய கணவன் விபத்தில் இறந்து விட்டான்.அதனால் அப்பெண்ணிற்கு மறுமணம் செய்ய விரும்புவதாகவும் உங்களுக்கும் பெண் கிடைக்காததால் இப்பெண்ணை மறுமணம் செய்து கொள்கிறீர்களா?என்று கேட்டாள்.பூடுதி சொன்னதைக் கேட்ட மாரிமுத்து சற்று தடுமாறினான்.சொந்தபந்தங்களையும், ஊர்மக்களையும் நினைத்துப் பார்த்தான்.

"இதுவரைக்கும் தானும் பல பெண்களைப் பார்த்தாகிவிட்டது.நிறையப் பேருடன் மனத்துக்குள்ளேயே குடும்பம் நடத்தியும் விட்டான்.அதையெல்லாம் பார்த்தால் மூன்று மாதம் வேறொருவனுடன் வாழ்ந்த பெண் என்பது பெரிய விஷயமில்லை.அதைப்பற்றி யாரிடமும் சொல்லாமல் அவனாகவே மனத்துக்குள் பலவிதமாக யோசித்து அதன் பிறகு மனப்பூர்வமாகக் கட்டிக்கொள்ளலாம் என்று முடிவெடுத்தான்." (ப.173)

தன் மகனின் முடிவை அறிந்த மாரிமுத்துவின் தந்தை ஓடோடி வந்து இந்தப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளலாம் என்று நினைத்தால் "நான் நாணுக்கிட்டுச் செத்துருவம் பாத்துக்க. நீ அவ கழுத்துல தாலி கட்டறதுக்கு முன்னால எனக்குப் பாட கட்டோனும்" (ப.173) என்று கூற அந்த வரனும் நின்று போனது.

"உடலின் வேகம் கூடிக் கொண்டே இருந்தது. ஆசை கூடாமலே வெந்து தணிய வேண்டியது தான் இதற்கு விதி போலும், ஒருடல் முப்பத்தைந்து வயது வரைக்கும் சக உடலை அறிந்து கொள்ள முடியாதிருக்கும் போது வேதனை சாதாரணமானதல்ல. அந்த துக்கம் வேறெந்த்ப் பதிலியாலும் நிவர்த்தி செய்ய முடியாத ஆழ்துக்கம்.( ப.27) இதேபோல பாட்டியின் அண்ணன் பேத்தி, குடிப்பழக்கம் உள்ளது தெரிந்து திருமணம் நின்றுபோனதால் குடிப்பழக்கத்தைக் கைவிடுதல், தன் பெண் செல்லமாக வளர்க்கப்பட்டவள் அவளால் டி.வி. இல்லாமல் இருக்கமாட்டாள் என்று கூறியதால் உடனே வீட்டிற்கு டி.வி. வாங்கி வவைத்ததால் அம்மாவிடம் திட்டு வாங்குதல்,ஒரு சமயம் பேசிக்கொண்டிருக்கும்போது பூடுதி என்ற பெண் சின்னக்கவுண்டரே உங்களுக்கு எங்கள்

சாதியில் பெண் பார்க்கட்டுமா? என்று கேட்டல் என பல இடங்களில் மாரிமுத்து மனப்போராட்டத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

**பாட்டியின் ஆறுதல் :**

''உனக்கு இன்னமேலா ஒருத்தி பொறந்து வரப் போறா, எங்காச்சும் ஆண்டவன் பொறப்பிச்சிருப்பாரு. அவளைக் கண்டுபிடிக்கக் கொஞ்சம் காலமாவுது அவ்வளவுதான்” (ப.26) என்று பாட்டி மாரிமுத்துவுக்கு அடிக்கடி சமாதானம் சொல்லிக்கொண்டிருந்ததால் மாரிமுத்துவுக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

**மாரிமுத்து சந்தித்த அவமானம்:**

தன் நண்பர்களின் கேலி பேச்சுக்களாலும், உறவினர்கள் மற்றும் ஊரார்களின் கிண்டல்களாலும் கூச்சமும் தவிப்பும் கூடிய அந்த வயதில் உடல் உறுப்புகள் சம்பந்தப்பட்ட சொற்களால் அவன் அவமானப் படுத்தப்பட்டுள்ளதைப் பல இடங்களில் காண முடிகிறது.

**மாரிமுத்துவின் விருப்பம்:**

இந்த உலகத்தில் எந்த ஆணுக்கும் தன்னைப்போல நிலை வரக்கூடாது என்று எண்ணி தன் மனதுக்குள் திருமணம் ஆனால் பழங்காலம் போல பத்து குழந்தைகளையாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அதுவும் அனைத்தும் பெண் குழந்தைகளாக இருக்கவேண்டும் என்பது மாரிமுத்துவின் விருப்பமாக இருந்தது.

**பெண்குழந்தைகளின் பிறப்பு விகிதம்:**

காலத்தின் மாற்றத்திற்கேற்ப பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. அதற்குக் காரணம் பெரும்பாலானோர் ஒரு குழந்தை போதும் என்ற மனநிலையில் உள்ளதாலும் அதுவும் முதல் குழந்தை ஆண் குழந்தையாக பிறந்துவிட்டால் அடுத்த குழந்தை வேண்டாம் என்று நிறுத்திவிடுகிறார்கள். முதல் குழந்தை பெண்

குழந்தையாகப் பிறந்துவிட்டால் தான் அடுத்த குழந்தைப் பற்றி யோசிக்கிறார்கள். இரண்டாவது முறை கருவுற்றால்  அதுவும் பெண் குழந்தையாக இருக்குமோ என்று நினைத்து ஸ்கேன் (வருடி) செய்து பார்க்கிறார்கள். பெண் குழந்தை என்று தெரிந்தவுடன் கருவை கலைத்துவிடுகிறார்கள். அதனால் தான் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாக தானாவதித்தாத்தா கூறுவதன் மூலம் அறியமுடிகிறது.

**மாரிமுத்துவின் திருமணம்:**

தன்  நண்பன் ராமன் கூறிய பெண்ணைப் பார்க்க நினைத்து அப்பெண்ணின் விவரங்களை அறிந்து கொண்டான். பெண்ணின் பெயர் ராசாமணி என்று கேட்டவுடன் அவன் ஏற்கனவே பார்த்த  பெண்களின் பெயர்களில் ஒன்றாக இருந்ததால் அவள் நினைவுக்கு வந்தாள். ராமன் அப்பெண்ணின் தந்தையைப் பற்றிக் கூறியதைக் கேட்ட மாரிமுத்து சற்று தயங்கினான்.அதற்குக் காரணம் அவள் அப்பன் பெயர் தெரியாதவள் என்பது தான்.இதுவரை தான் பார்த்த பெண்களில் ஒன்றுகூட அமையவில்லையே என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டான்.இப்பெண்ணாவது அமையாதா?அப்பெண்ணோடு திருமணம் நடக்காதா?என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தாலும், அவளைப் பற்றி உறவினர்களும், ஊரார்களும் தவறாகப் பேசுவார்களோ என்று எண்ணி பயந்து கொண்டிருந்தான். கடைசியாக மனதைத் தேற்றிக்கொண்டு இதைப் பற்றி திருமணம் நடக்கும் வரை யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதில் கவனமாக இருந்து திருமண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

திருமணத்திற்கு முதல் நாள் வரவேற்பில் மணப்பெண்ணின் அப்பாவைப் பற்றி உறவினர்கள் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியதால் அதற்கு பதில் கூறமுடியாமல் ராசாமணி அழுது கொண்டிருந்தாள். அதைக் கவனித்த மாரிமுத்துவிற்கு உறவினர்கள் மீது கோபம் ஏற்பட்டது.அழுது கொண்டிருந்த ராசாமணியைத் தேற்றினான். உறவினர்களுக்கு ராசாமணியின் தந்தைப் பற்றிய உண்மை தெரிந்துவிட்டால் ஏதாவது காரணங்களைக் கூறி திருமணத்தை நிறுத்தி விடுவார்களோ என்ற பயம் மனதில் ஓடிக்கொண்டேயிருந்தது.

தனக்குக்  திருமணம் நடக்கவேண்டும், அதைக் கண்குளிர பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்ட பாட்டி இப்பொழுது நோய்வாய்பட்டு படுத்த படுக்கையாக இருப்பதால்

வரமுடியவில்லை. பாட்டிக்காக எடுத்த புடவையை பாட்டிக்குக் கட்டி விட்டு அவள் காலில் விழுந்து கும்புடு (ஆசிர்வாதம்) வாங்கிய பிறகே தாலிகட்டவேண்டும் என்று விரும்பினான்.அன்று இரவு வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும் பாட்டியைப் பார்க்க கிளம்பினான். தானாவதி தாத்தாவிடம் தாலிக் கொடியை மறந்து வீட்டில் வைத்து வந்து விட்டதால் அதை எடுத்துக்கொண்டு வருவதாகப் பொய் கூறிவிட்டு கிளம்பினான். அதற்குத் தானாவதி தாதா,

> "இந்நேரத்துக்கு எதுக்கு மாப்ள… கங்கணம் கட்டிட்டா அப்புறம் எங்கேயும் போவக்கூடாது. வேற ஆரையாச்சும் அனுப்புங்க… போய்ட்டு வரட்டும்…(ப்.417)

என்று கூற அதை ஏற்றுக்கொள்ளாத மாரிமுத்து ஏதேதோ காரணம் கூறி தானே புறப்பட்டான். தன் வீட்டிற்குச் சென்று பாட்டியின் புதுப்புடவையை எடுத்துக்கொண்டு பாட்டியின் கொட்டகைக்குச் சென்றான். அந்நேரத்தில் மாரிமுத்துவைப் பார்த்த குப்பன், இப்ப எதுக்கு வந்தீங்க சின்னக்கவுண்டரே,

> " கங்கணம் கட்டீட்டா மாப்ள அங்க இங்க நவரக்கூடாதுன்னு உங்களுக்கு ஆருஞ் சொல்லலீங்களா கவுண்டரே….(ப.421)

என்று கூற இவன் யார் என்னைக் கேள்வி கேட்க என்று மாரிமுத்துவுக்கு கோபம்வந்தது.இருப்பினும் பாட்டியிடம் கும்புடு வாங்கலாம் என்று வந்தேன் என்று கூறினான்.சற்று தயங்கிய குப்பன் சின்னக்கவுண்டரே, பெரியக்கவுண்டச்சி நம்மள விட்டுப் போயிட்டாங்க என்று கூறிக் கதறி அழுதான்.குப்பனின் வார்த்தைகள் மாரிமுத்துவின் காதுகளில் இடியாக வந்து விழுந்தது. இவ்வளவு நாளாக உயிரைப் பிடித்து வைத்திருந்த பாட்டி இன்றைக்குத்தானா உயிரைவிடவேண்டும், விடிந்தால் தாலி கட்ட வேண்டும், ஆனால் இப்பொழுது…. என்ன செய்வது என்று புரியாமல் மனப்போராட்டத்தில் நின்று கொண்டிருந்த மாரிமுத்துவுக்கு ராசாமணியின் நினைவு வந்தது.

**முடிவுரை**

முப்பத்தைந்து வயதைத் தாண்டிய இளைஞனுக்கு திருமணம் நடைபெறாமலிருப்பதால் அவன் சந்திக்கும் ,உணரும் பிரச்சனைகளை மாரிமுத்துவின் மூலம் அழகாக கூறியுள்ளார் ஆசிரியர். மாரிமுத்து போன்ற இளைஞர்கள் இன்றும் வேளாளர் சமூகத்தில் மட்டுமல்லாமல் எல்லா சமூகத்திலும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.